★ பக்கங்கள் 8 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No: QB/8945/78

மலர்: 21 வைகாசி: 11 ஜ-அகிர்: 27 இதழ்: 105
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 25-5-79

இறக்குமதி செய்யப்பட்ட
ஃ பலவித பரிசுப் பொருட்கள், அழகு சாதனப் பொருட்கள், தையல் வேலைகளுக்குரிய சகல பொருட்கள்.
மற்றும்
ஃ யப்பான் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பலதரங்களிலுமுள்ள காதுகேட்கும் கருவிகள் யாவற்றையும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்.
கிருபா கிவ்ற் கவுஸ்
KIRUBA GIFT HOUSE,
சோதிட விலாஸ் கட்டிடம்
46, பெரியகடை - யாழ்ப்பாணம்.
தொலைபேசி; 8083

## அடையாள வேலை நிறுத்தம் செய்தனர்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ப. நோ. கூ. சங்க ஊழியர்கள், அரசின் ஐம்பது ரூபா சம்பள உயர்வு, தேவையற்ற புதிய நியமனம்போன்ற கோரிக்கைகளை முன்வைத்து நேற்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இதனால் சகல நுகர்ச்சிக் கிளைகளும், மொத்த விற்பனை நிலையங்களும் ஸ்தம்பிதம் அடைந்தது.

அடையாள வேலை நிறுத்தம் (2-ம் பக்கத் தொடர்ச்சி)

# சிறிய வீடுகளின் சோலைவரி முற்றாக நீக்கப்படும்!

## பிரதம மந்திரி அறிவிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களின் தத்தமது பகுதியிலுள்ள நிலைமைகளுக்கேற்ப வரிகளை நிர்ணயித்துக்கொள்ள அனுமதிக்கப்படும் சிறிய வீடுகளுக்கான சோலைவரி முற்றாக நீக்கப்படும்.

பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாசா நேற்று பாராளுமன்றத்தில் கூறினார்.

மாநகரசபை உள்ளூராட்சி மன்றக் கட்டளைச் சட்டத்தின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பிரதமர் பேசினார்.

மேற்படி சட்டமூலம் நிறைவேறியது.

பிரதமமந்திரி மேலும்பேசும்போது இது சிங்களநாடோ, தமிழர் நாடோ, முஸ்லிம்கள் நாடோ அல்ல. இது இலங்கை. இது சகல மக்களுக்கும் உரியது. நாடு முழுவதையும் அபிவிருத்திசெய்வதே எமது நோக்கம். எவருக்கும் பாரபட்சம் காட்டப்படமாட்டாது. யாழ்ப்பாணத்தில் மாத்திரம் பாரபட்சம் இருக்கவில்லை. நாட்டின் ஏனைய பாகங்களிலும் இந்நிலைமை இருக்கிறது. நாடு முழுமைக்குமான திட்டங்கள் மூலம் இது நீக்கப்படும். இவ்வபிவிருத்தி மூலம் தமிழ் ஈழக் கோரிக்கையும் மறைந்துவிடுமென்றார் பிரதமர்.

அவர் மேலும் பேசுகையில் எந்த நாட்டிலும் எதிர்க்கட்சிகள் இந்த வகையில் மக்களை

(2-ம் பக்கம் பார்க்க)

## பூட்டோவின் நாமத்தை வரலாற்றிலிருந்து அழித்துவிட முடியாது

[யாழ்ப்பாணம்]

"ஜனாப் சூல்பிகார் அலி பூட்டோவை பாகிஸ்தானின் இன்றைய ஆட்சியாளர்கள் தூக்கிலிட்டுக் கொன்றுவிட்டாலும் அவரது நாமத்தைப் பாகிஸ்தானினதும், உலகத்தினதும் வரலாற்றிலிருந்து அழித்துவிடமுடியாது. ஜனாப் பூட்டோ, பாகிஸ்தான் மக்களின் ஜனநாயக அபிலாசைகளின் பிரதிநிதியாகத் திகழ்ந்தது மட்டுமின்றி, உலக மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்பு, காலனித்துவ எதிர்ப்புமேலாதிக்க எதிர்ப்பு போராட்டத்தில் ஒரு சிறந்த போராளியாகவும் விளங்கினார்"

இவ்வாறு யாழ்ப்பாணம் சமூக விஞ்ஞானக்கல்வி வட்டத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட "ஜனாப் சூல்பிகார் அலிபூட்டோவின் வரலாற்றுப் பங்கு" எனும் தலைப்பிலான சொற்பொழிவில் மாதகல் திரு. வ. கந்தசாமி குறிப்பிட்டார்.

கல்வி வட்டத்தின் தலைவர் திரு. கே. ஸ்ரீதரன் தலைமையில் யாழ். பொன்ட் இன்ஸ்ரியூட்ஸ் மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி உரையில் திரு. கந்தசாமி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது!

"இராணுவ ஆட்சிகளால் நிரப்பப்பட்ட பாகிஸ்தானின் வரலாற்றில் பூட்டோவின் ஆட்சிக்காலம் மிகமுக்கியமானதாகும். பூட்டோ,

(2ம் பக்கம் பார்க்க)

## துன்பங்களைத் தாங்கும் மனோநிலை வேண்டும்

### கவிஞர் காசி ஆனந்தன் கருத்து

[மட்டக்களப்பு]

துன்பங்களைத் தாங்கிக் கொள்ளும் மனோநிலைக்குத் தமிழ்மக்கள் தம்மைத் தயாராக்கிக்கொள்ளவேண்டும் என்று சிறையிலிருந்து விடுதலையாகி வந்துள்ள கவிஞர் காசி ஆனந்தன் கூறினார்.

மட்டக்களப்பு இளைஞர் பேரவைக் காரியாலயத்தில் அளிக்கப்பட்ட வரவேற்பின் போது கவிஞர் காசிஆனந்தன் உரையாற்றினார். கூட்டத்துக்கு இளைஞர் பேரவைத் தலைவர் திரு வாசுதேவா தலைமை வகித்தார். திரு காசிஆனந்தன் மேலும் கூறியதாவது!

மட்டக்களப்பு மத்திய கல்லூரியில் இருபது வருடங்களுக்கு முன் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிக்கு மேற்படி கல்லூரியின் பழைய மாணவரும், அரை மந்திரியுமான ஜனாப் முஸ்தாபாவை பிரதம விருந்தினராக அழைத்திருந்தனர்.

ஜனாப் முஸ்தாபா பிரதம விருந்தினராக வருவதை அறிந்த அண்ணன் இராசதுரை என்னையும் செனட்டர் மாணிக்கத்தையும் அழைத்து ஜனாப் முஸ்தாபா அரை மந்திரிப் பதவிக்கு ஆசைப்பட்டு தமிழரசுக் கட்சியை விட்டு மக்கள் ஐக்கிய முன்னணியில் சேர்ந்தார் என்றும் அவர் வரும்போது அவருக்குக் கறுப்புக் கொடி காட்டவேண்டுமென்றும் கூறினார். நாமும் அதை ஏற்று மட்டக்களப்பு முற்றவெளியில் நின்று ஜனாப் முஸ்தாபா வரும்போது கறுப்புக் கொடி காட்டி ஆரவாரம் செய்தோம். அன்று ஜனாப் முஸ்தாபாவுக்குக் கறுப்புக் கொடி காட்டிய அண்ணன் இராசதுரை இன்று அதைவிடக் குறைந்த மந்திரிப் பதவிக்கு ஆசைப்பட்டு ஐக்கிய தேசியக் கட்சி அரசுடன் இணைந்துள்ளார். அண்ணன் இராசதுரை காட்டிய வழியில் சென்று அவருக்கு நாம் கறுப்புக் கொடி பிடிப்பதா?

எனது இருபத்து ஐந்து வருட அரசியல் வாழ்வில் பன்னிரண்டு தடவை கைது செய்யப்பட்டு, ஐந்து வருடங்களுக்கு மேல் சிறைச்சாலையில் எனது வாழ்வைக் கழித்துள்ளேன்.

தமிழர் விடுதலை இயக்க வரலாற்றில் கூடிய தடவை பொலிசாரால் கைது செய்யப்பட்டு மறியல் வைக்கப்பட்டவன் நான் தமிழனின் விடுதலைப் போரில் ஈடுபட்டு மறியல் தண்டனை அடைவதில் பெருமைப்படுபவன் நான். விடுதலைப் போராட்டத்தில் எனது உயிரே போனாலும் அதற்காகப் பெருமைப்படுவேனேயன்றி அடக்குமுறையைக் கண்டு அஞ்சி ஓடமாட்டேன். தமிழ்த் தாயின் விடுதலைக்காக என் சிரத்தை என்றோ கொடுத்துவிட்டேன். எனது சிரம் எனது உடலில் இருப்பதாக நான் நினைக்கவில்லை ஆட்சியாளரிடம் ஒப்படைக்கப்பட்ட சொத்துக்களில் ஒன்று எனது தலை.

தமிழர் விடுதலைக் கூட்டணி வெகு விரைவில் அறப்போர் இயக்கமாக மாறும். அ

[6ம் பக்கம் பார்க்க,

## இலங்கைத் தமிழர் பிரச்னை

# மாஸச்சுசெட்ஸ் மாநில சட்டமன்றத் தீர்மானவிபரம்

[நமது நிருபர்]

அமெரிக்காவில் மாஸச்சுசெட்ஸ் மாநில மக்கள் பிரதிநிதிகள் சபையும் செனட் சபையும் இலங்கை தமிழர் பிரச்னை தொடர்பாக நிறைவேற்றிய தீர்மானத்தின் முழுவிபரம் கீழே தரப்படுகின்றது

இப்பிரச்னையில் தலையிட்டு தீர்த்துவைக்கும்படி அமெரிக்க அதிபர் ஜிம்மி காட்டரையும் காங்கிரஸ் சபையையும் இத்தீர்மானம் வற்புறுத்துகின்றது.

8000 சதுரமைல் பிரதேசத்தில் வாழும் இந்து, கிறிஸ்தவ முஸ்லிம்கள ஆகிய 30 லட்சம் ஈழத்தமிழர்கள் பெரும்பான்மைப் பௌத்தர்களாய் இருக்கும் 100 லட்சம் சிங்களப் பெரும்பான்மையினர் மத்தியில் இலங்கையில் துன்புறுத்தப்படும் ஒரு சிறுபான்மையோராக இருந்துவருவதனாலும் ஆதிகாலம்தொட்டு சிங்களவர் தமிழர் ஆகிய இரு தேசிய இனங்களும் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் வரையறுக்கப்பட்ட தனித் தனிப் பிரதேசங்களில் தத்தம் சொந்தமொழிகளைப் பேசியும் மதங்கள் கலாசாரங்களைப் பின்பற்றியும் வந்தபோது கொலோனியல் நிர்வாகசுலபம் கருதி தேசிய இனங்கள் இரண்டையும் கைப்பற்றிய பிரிட்டிஷ் ஆட்சியாளர் இவர்களுக்கிடையே நிலவி வந்த தனித்தன்மைகளை மறந்தவர்களாகி தனி ஓர் ஆட்சியை இவர்கள் மீது திணித்தபடியினாலும் 1948ல் பிரிட்டிஷார் இலங்கையை விட்டு வெளியேறிய போது ஒன்றுக்கொன்று ஒருமித்துவாழ சம்மதமற்ற இரு தேசிய இனங்களையும் வழமைபோல் சாவகாசமாக ஒற்றை ஆட்சி அரசமைப்பின்கீழ் விட்டுச்செல்லவே, பெரும்பான்மைச் சிங்களமக்கள் ஜனநாயகக் கோட்பாடுகளை அறுத்து பிரிந்து தமிழ்பேசும் மக்களின் புதிய எஜமானர்களாகிவிட்டபடியினாலும்,

சுதந்திரத்திற்குப் பின்னர் ஏனைய இலங்கை மக்களுடன் ஒத்தஉரிமைகளை அனுபவித்து வந்த தேயிலை ரப்பர் தோட்டங்களிலுள்ள 10 லட்சம் தோட்டத்தொழிலாளர்களும் உரிமைகள் பறிக்கப்பட்ட நாடற்றவர்களாக ஆக்கப்பட்டமையினாலும் — 1956ல் நாடுமுழுவதும் சிங்களம் மட்டுமே ஆட்சிமொழி என்ற சட்டத்தை நிறைவேற்றியும் அதன்மூலம் பல்லாயிரக்கணக்கான தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு தொந்தரவுகளை ஏற்படுத்தியும் அதன்விளைவாக அவர்கள் பிறநாடுகளுக்குப் பெயர்ந்துசெல்லவும் காரணியாக அமைந்ததுடன் தகைமைபெற்ற ஏனைய தமிழர்களையும் அரசாங்க சேவையிலிருந்து ஒதுக்கிவைத்துவருகிறபடியாலும் உலகம் பரந்திருந்த பிரிட்டிஷ் தோட்டத் துரைமார்களினால் 100 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டவர்களின் வம்சாவழியினராக தோட்டத் தொழிலாளர்கள் இருந்தும் தாம் இருந்து வந்த இந்திய நாட்டுடன் எவ்விதத் தொடர்பும் இல்லாதவர்களாகவும் இலங்கை சுதேசிகளாய் இருப்பவர்களுக்குமா

[6ம் பக்கம் பார்க்க]

யா / வைத்தீஸ்வர வித்தியாலயம்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

**அங்குரார்ப்பணக்கூட்டம்**

27-5-79 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு நடைபெறும். பெற்றோர், பழைய மாணவர், நலன் விரும்பிகள் யாவரையும் அழைக்கின்றேன்.

2552 அதிபர்



## கோப்பாய் கிராமசபை
## கேள்வி விளம்பரம்

கோப்பாய் கிராமசபை விசேட ஆணையாளர் அவர்களால் கீழ்க்காணப்படும் வேலைகளுக்கு சீல்வைத்தகேள்விகள் 8-6-79ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-00 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விப் பத்திரங்கள் 7-6-79ந் திகதி வியாழன் மாலை 2-00 மணிவரைக்கும் வழங்கப்படும். கேள்விப் பத்திரப் பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

மேலதிக விபரங்களை கிராமசபை அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

| | வீதியின் பெயர் | | | பத்திரப் பணம் | பிணைப் பணம் |
|---|---|---|---|---|---|
| 1. | இலகடி வீதி, | கோப்பாய் வடக்கு | | 10/- | 50/- |
| 2. | அதிகாரம் வீதி | ,, | தெற்கு | 10/- | 50/- |
| 3. | அதிரம்புலம் வீதி | ,, | ,, | 10/- | 50/- |
| 4. | கொங்கமை வீதி | ,, | ,, | 10/- | 50/- |
| 5. | வீரபத்திரர் கோவில் | | ,, | 10/- | 50/- |

ஜே. எஸ். எஸ். ஆனந்தம்,
விசேட ஆணையாளர்,
கிராமசபை, கோப்பாய்.

விசேட ஆணையாளர்
அலுவலகம்,
கிராமசபை, கோப்பாய்.
21-05-79

2549


# "இளைஞர் வாழ்வு நாட்டுக்கு பயன்படவேண்டும்"

[யாழ்ப்பாணம்]

"இளைஞர்கள் வேலைதேடி அலைந்து, தமது வாழ்க்கையை வீணடிக்காது, வாழ்க்கையைத் தமக்கும் நாட்டிற்கும் பயன் உள்ளதாக அமைக்க வேண்டும்"

இவ்வாறு மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் சாவகச்சேரி இளம் விவசாயிகள் கழகங்களால் நடாத்தப்பட்ட இளம் விவசாயிகள் விழாவிலும், பொருட்காட்சியிலும் கலந்துகொண்டு யாழ். மாவட்ட விவசாய விரிவாக்க உத்தியோகத்தர் திரு. நா. சிவமுத்துலிங்கம் பேசுகையில் தெரிவித்தார்.

திரு. க. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் திரு. சிவமுத்துலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: "வேலையற்று இருக்கும் இளைஞர்கள் தமது வீட்டில் தரிசாகக் கிடக்கும் நிலங்களைத் திருத்தி அதில் பயிர்களைச் செய்வதன் மூலம் வேலை இல்லாப்பிரச்சினையை ஓரளவு தீர்ப்பதுடன் தமது தேவையின் ஒருபகுதியையும் பூர்த்திசெய்ய முடியும். இதனால் நாட்டிற்கும், வீட்டிற்கும் சேவைசெய்தவர்களாக இளைஞர்கள் திகழமுடியும்.

"சாவகச்சேரி தொகுதியில் ஒன்பது விவசாயக் கழகங்களும் தமது தொகுதியில் உள்ள வேலையற்ற வாலிபர்களுக்கு விவசாயத் தொடர்புடைய தொழிலை அறியவும், பயிலவும் உதவிபுரியவேண்டும்"

வீரசிங்கம் மகாவித்தியாலய நடன ஆசிரியை செல்வி ரேலங்கி செல்லையாவினால் மேநற்படுத்தப்பட்ட பாடசாலை மாணவிகளின் நடன நிகழ்ச்சியும் இடம்பெற்றது. (கொ)

## வரலாற்றிலிருந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ ஏதேச்சாதிகாரத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்குப் போராடியதுடன், மக்களின் ஜனநாயகவாழ்வை மலரச்செய்வதற்கும் முயன்றார். நாட்டின் பொருளாதார கல்விக்கொள்கைகளில் பல முற்போக்கான மாறுதல்களைச் செய்ததுடன் நிலச் சீர்திருத்தக் கொள்கைகளையும் அமுல் செய்து, பல இலட்சம் ஏக்கர் நிலங்களை ஏழைமக்களுக்கு இலவசமாகமாக விநியோகித்தார்.

"பங்களாதேஷ் யுத்தத்தின் போது முஜிபுர் ரஹ்மானை பாகிதானின் இராணுவத் தலைவர்கள் கொலைசெய்யத் திட்டம்திட்டினர். பூட்டோ அதிகாரத்திற்கு வந்ததும் முஜிபுர் ரஹ்மானை நிபந்தனையின்றி விடுதலை செய்ததுடன், பங்களாதேஷ் அரசையும் அங்கீகரித்தார், நீண்டகாலமாக மேற்கத்திய ஏகாதிபத்தியங்களைப் பின் பற்றிய பாகிஸ்தானின் வெளிநாட்டுக் கொள்கையை பூட்டோ மாற்றியமைத்ததுடன் மூன்றும் உலகநாடுகளுடன் பாகிஸ்தானின் உறவுகளை அதிகமாக வளர்த்தார். கம்பூச்சிய மக்களின் ஏகாதிபத்திய-எதிர்ப்புப் புரட்சியின் போது பீக்கிங்கிலிருந்த சிஹானுேக் தலைமையிலான அரசை உறுதியாகஆதரித்தார் அவர் வெளிநாட்டு அமைச்சராகப் பதவி வகித்த காலத்தில் ஐ நா சபைக்கு பல தூதுகோஷ்டிகளுக்குத் தலைமை தாங்கிச்சென்று அடக்கியொடுக்கப்பட்ட நாடுகளினதும் மக்களினதும் போராட்டங்களுக்கு ஆதரவாகக் குரல் எழுப்பினுர் இரண்டு மேலாதிக்க வல்லரசுகளுக்கும் எதிரான போராட்டத்தில் பாகிஸ்தானை உறுதியான நடுநிலைமை நாடாக்குவதற்குப் பாடுபட்ட ஜுல்பூட்டோவின் மரணம், இலங்கை மக்களுக்கும் உலகமக்களுக்கும் அதிர்ச்சியையும் கவலையையும் அளித்துள்ளது. ஆனல் பாகிஸ்தான் மக்கள் அவரது பாதையைப் பின்பற்றி எதிர்காலத்தில் தமது விடுதலையைத் தேடிக் கொள்வார்கள் என உறுதியாக நம்பலாம்"


# பிரதேச அபிவிருத்தி அமைச்சு

## (இந்து சமய, இந்து கலாசாரப் பிரிவு)

இந்து சமயம், இந்து கலாசாரம் சம்பந்தமாக ஆக்க பூர்வமான பணிகளை மேற்கொள்வதற்கு ஆலோசனை பெறும் நோக்கத்துடன், இலங்கையில் செயல்பட்டுவரும் :-

இந்து சமய சபைகள், சங்கங்கள்
சைவ ஸ்தாபனங்கள்
இந்து இளைஞர் இயக்கங்கள்
இந்து மகளிர் மன்றங்கள்
இந்து கலாசார நிறுவனங்கள்

ஆகியவற்றின் முகவரிகளையும், மேற்படி அமைப்புகளில் உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றி வரும் பிரமுகர்களின் பெயர்களையும் இந்த அமைப்புகள் எந்தப் பாராளுமன்றத் தொகுதிக்குள் அடங்கும் என்பதையும் பிரதேச அபிவிருத்தி அமைச்சில் பதிவு செய்து வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

எனவே, மேற்கூறிய விபரங்களை 1979 ஜூன் 15-ம் திகதிக்கு முன்பதாக :-

செயலாளர்,

பிரதேச அபிவிருத்தி அமைச்சு
(இந்து சமய கலாசாரப் பிரிவு)
சிலிங்கோ மாளிகை, 2-ம் மாடி,
**கொழும்பு - 1.**

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டுகின்றேன்.

செயலாளர்.

பிரதேச அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு.
2510



## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

மண்ணெண்ணெயில் கோழிக்குஞ்சு பொரிக்கும் மிஷின் பெட்டி இரண்டு விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். க. செ. இருதயம், 98, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். 2537

அண்மையில் இறக்குமதி செய்யப்பட்ட 31 ஸ்ரீ 2188 டீசல் மொறிஸ் மறினு (மெற்றலிக் நீலம்) பிற்பகல் 2-00 மணி தொடக்கம் பார்வையிடலாம். விலாசம்: செ. ராஜநாயகம், ஊரங்குனை, கட்டுவன், தெல்லிப்பழை. 2530

### தேவை

பிடவைக்கடைக்கு பெண் விற்பனையாளர்தேவை நேரில் வரவும். வேல் முருகன் ஸ்ரோர்ஸ், கண்டிவீதி கைதடி 2534

### அறிவித்தல்

26-5-79-ல் நடைபெறவிருந்த மாயாஜாலக் காட்சி ஒத்திவைக்கப் பட்டுள்ளது. திகதி பின்பு அறிவிக்கப்படும்.

பொலிகண்டி
ஐக்கிய விளையாட்டுக்
கழகம் 2551


## சிறிய...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

செல்வாக்கை இழந்ததைத் தாம் கண்டதில்லையென்ருர்.

திரு தம்மலங்கம் குறுக்கிட்டுத் தமது ... செல்வாக்கை இழக்கவில்லையென்ருர்.

பெரும்பான்மை மக்களின் செல்வாக்கை நீங்கள் பெறவில்லை. அவ்வாறு இருக்குமானுல் மற்ற இடங்களிலும் நீங்கள் போட்டியிட்டிருக்கலாம் என்ருர் பிரதமர்.

கட்டிட மதிப்பீட்டு வரி நீக்கப்படும். சிறிய வீடுகள் குடியிருப்பாளரிடம் ஒப்படைக்கப்படும் என்றும் பிரதமமந்திரி கூறினுர். (ம)

## அடையாள...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பமாவதற்கு முன்னர் பணியாளர்கள் அனைவரும், சுலோக அட்டைகளைத் தாங்கி, திருநெல்வேலிச் சந்தியிலிருந்து ஊர்வலமாக தலைமைப் பணியகத்தைச் சென்றடைந்தனர்.

சமரசப் பேச்சுவார்த்தை பலனளிக்காமையினுல், அடுத்த மாதம் 8 ந் திகதி வேலை நிறுத்தத்தில் மீண்டும் ஈடுபடுவது குறித்து நெறியாளர்களுக்கு ஊழியர் சம்மேளனம் அறிவித்துள்ளது. (கெ)


உ

## திருமண அழைப்பு

மணமகன்: மணமகள்:
கேதீஸ்வரசர்மா — நாராயணி
(கண்ணப்பா) (கௌரி)

இடம்: கீரிமலை நகுலேஸ்வர தேவஸ்தானம்
முகூர்த்தநேரம்: 27-5-79 ஞாயிறு
காலை 9-30 மணி முதல்

வரவேற்புபசாரம்:
27, 28-5-79 மணமகள் இல்லத்தில் மாலை 4 மணி
30-5-79 மணமகன் இல்லத்தில் மாலை 4 மணி

உறவினர்கள், நண்பர்கள், அனைவரையும்
குடும்ப சமேதராக அன்புடன் அழைக்கின்ருேம்

சிவஸ்ரீ
ச. சுப்பிரமணியபட்டர்
பிரதமகுரு,
திருக்கேதீச்சர
தேவஸ்தானம்,

சிவஸ்ரீ
கு. நகுலேஸ்வரகுருக்கள்
நகுலேஸ்வர ஆதீனம்,
கீரிமலை.

2542

"யாழ். மாநகர கூட்டணி உறுப்பினர்கள்

# இலட்சிய வரம்பிற்குள் நின்றே பணியாற்றுவர்!

[யாழ்ப்பாணம்]

"கூட்டணியின் நிர்வாகத்தின் கீழ் இயங்கவிருக்கும் யாழ். மாநகரசபை, ஏனைய உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைய வுள்ளது. அதுமேலும் சிறப்புற வேண்டுமானால் மாநகர முதல்வருக்கும் உறுப்பினர்களுக்கும் மக்கள் போதிய ஒத்துழைப்புக் கொடுக்கவேண்டும். மாநகரசபை உறுப்பினர்கள் இலட்சிய வரம்பிற்குள் நின்றே செயல்படுவார்கள்."

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைக்காரியாலயத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் குறிப்பிட்டார்.

இம்மகாநாட்டில் சட்டத்தரணி மு ஆலாலசுந்தரம், திரு. க முருகரெத்தினம், திரு. க கனகலிங்கம், மாநகர சபை உறுப்பினர் திரு. எஸ் தியாகராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

(இச்செய்தியின் ஒரு பகுதி நேற்று முன்தினம் வந்தது. பிற்பகுதி இங்கு வருகிறது)

நிருபர்: யாழ். மாநகரை இழிவுபடுத்தும் முறையில் சில வீதிகளுக்கும், பொது இடங்களுக்கும் ஒருவரின் பெயர் சூட்டப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறதே என்ன செய்யப்போகிறீர்கள்?

ஆலால்: மக்களின் விருப்பத்திற்கிணங்க அப்பெயர்களை நீக்கி வேறுபெயர்களை மாற்றுவது பற்றி யோசிக்கப்படும்.

நிருபர்: தமிழ்த்தலைவர் சேர் பொன் இராமநாதனின் சிலைக்கு முன்னால் அவருக்கு எந்தவிதத்திலும் சமானமில்லாத இன்னொருவரின் சிலை இருந்து சேர் பொன் இராமநாதனின் பெயருக்குக்களங்கம் விளைவிப்பதாகக் கூறப்படுகிறதே?

ஆனால்: அதையும் அகற்றி அந்த இடத்தில்தகுதி வாய்ந்த தமிழ்த் தலைவர் ஒருவரின் சிலை நிறுவது பற்றி ஆலோசிக்கப்படும்.

நிருபர்: நாட்டில் கொந்தளிப்பு நிலை உருவாகியுள்ளதே?

யோகேஸ்: கூட்டணிக்கு அபகீர்த்தி ஏற்படாதவாறு எனது தொகுதி மக்கள் நடந்து கொள்வார்கள். மாற்றுக் கட்சியினர் தேர்தலின்போது எமக்குப் பல இடைஞ்சல்களையும் விளைவித்த போதும் அவர்கள் செயலை மன்னித்து நாட்டில் அமைதியை நிலை நாட்டும்படி கூட்டணியினரை வேண்டுகிறேன்.

நிருபர்: வெற்றியீட்டிய கூட்டணி உறுப்பினர்களுக்கு மக்கள் ஏன் வரவேற்பு அளித்துக் கௌரவிக்கவில்லை.

யோகேஸ்: கேளிக்கைகளுக்கும் கொண்டாட்டத்திற்கும் இது தக்கசமயமில்லை. செயல் திறன் மிக்க கூட்டணியினர் மேலும் செயல்பட எண்ணியுள்ளனரே தவிர வரவேற்புகளில் கலந்து காலத்தை வீணாக்க விரும்பவில்லை. [கொ]

## மாதர் மன்றத்தின் இலவச தையல் வகுப்பு

(மல்லாகம்)

மல்லாகம் மாதர் மன்றம் இலவச தையல் வகுப்புக்களை ஆரம்பித்துள்ளது.

மல்லாகம் கிராம அபிவிருத்திச்சங்கக் கட்டிடத்தில், புதன் கிழமையிலும் ஞாயிற்றுக்கிழமையிலும் மாலை நேரத்தில் இடம்பெறும் இந்த இலவச தையல் வகுப்புக்களை, மாதர் மன்றத் தலைவி திருமதி பி. சபாரத்தினமும், மன்ற அங்கத்தவர்களான திருமதி ஆர். துரைசிங்கம், செல்வி கே. கந்தசாமி ஆகியோரும் நடத்துகின்றார்கள். முதல்நாள் வகுப்பிலேயே 46 மாணவிகள் கலந்துகொண்டனர் என்று மன்றத் தலைவி தெரிவித்தார்.

கிராம அபிவிருத்திச் சங்க கட்டிடத்தில் இடநெருக்கடி ஏற்படுவதால், ஒரு கட்டிடத்தை அமைக்க மாதர் மன்றம் திட்டமிட்டுள்ளதென்றும், இதற்காக நிதிசேகரிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்படுகிறதென்றும் தெரிவிக்கப்பட்டது. இப்பகுதி குழந்தைகளுக்காகபாலர் வகுப்புகளை ஆரம்பிக்கவும், சங்கீத நடன, வகுப்புகளை நடத்தவும் மன்றம் ஆலோசித்து வருகிறது.

## 'விசேஷ பஸ் வேண்டும்'

[உடுப்பிட்டி]

நெல்லியடியில் ரியூஷன் முடிந்து வீடு திரும்பும் மாணவ மாணவிகளுக்காக விசேட பஸ் சேவைகளை ஆரம்பிக்குமாறு பெற்ரோர், போக்குவரத்து அமைச்சரைக் கோரியுள்ளனர்.

நெல்லியடி பஸ் நிலையத்திலிருந்து தினமும் இரவு எட்டு மணிக்குப்புறு பொறுக்கிக்கும், கலிகைச் சந்தி வரைக்கும் விசேட பஸ் சேவைகளை ஏற்படுத்தித் தருமாறு கோரப்பட்டுள்ளது.

## வெள்ளோட்டம்

(யாழ்ப்பாணம்)

அளவை கும்பிழாவளைப் பிள்ளையார் கோவிலில் அதிக செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சப்பரம் வெள்ளோட்ட விழா, இம்மாதம் 31ம் திகதி கொடியேற்றத் திருநாளில் இடம்பெறும்.

## அச்சுவேலி ச. ச. நிலைய ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி மலைமகள் சன சமூக நிலைய 9-வது ஆண்டு விழா நாளை சனிக்கிழமை திரு. து. துரைராசசிங்கம் தலைமையில் நடைபெறும்.

காலை நிகழ்ச்சிகளின் போது சிவத்தமிழ் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, பண்டிதர் ச. சுப்பிரமணியம் ஆகியோர் சிறப்புரையாற்றுவர்.

மாலை நிகழ்ச்சிகளில் எதிர்க் கட்சித் தலைவர் திரு அ. அமிர்தலிங்கம், திருமதி அமிர்தலிங்கம். கோப்பாய் எம் பி திரு. சி கதிரவேலுப்பிள்ளை பருத்தித்துறை எம் பி திரு க துரைரத்தினம், மன்னார் எம் பி திரு சூசைதாசன், மானிப்பாய் எம் பி திரு வி தர்மலிங்கம், யாழ்ப்பாணம் எம் பி வெ யோகேஸ்வரன் திரு சந்ததியார் உட்பட பலர் சிறப்புரையாற்றுவார்கள்.

பட்டிமன்றம், கவியரங்கம், கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

மாவையில்

## செந்தில்துறவிகள் சொற்பொழிவு

[யாழ்ப்பாணம்]

செந்தில் முருகன் பக்தரான செந்தில் துறவி சுவாமிகள் மாவை ஆதீனத்தின் அழைப்பின்பேரில் இலங்கை வந்துள்ளார்.

சென்னை சாஸ்தா பதில் பகத்தின் மூலம் பல அரிய சமய நூல்களை வெளியிட்டு வரும் செந்தில் துறவிகள் இப்பொழுது மாவை ஆதீனத்தில் தங்கியுள்ளார்.

இன்று வெள்ளிக்கிழமை இரவு மாவை ஆதீனத்தில் அவரது சிறப்புச்சொற்பொழிவு நிகழும். இலங்கையில் அவர் நிகழ்த்தும் ஒரே ஒரு சொற்பொழிவாகும் இது. ஸ்வாமிஜியுடன் வந்துள்ள தமிழன்பர் திரு வி இராமமூர்த்தி 'சமயமும் தருணமும்' என்னும் பொருளில் உரை நிகழ்த்துவார்.

## உற்சவ பூர்த்திவிழா

[மாவிட்டபுரம்]

மாவை கொல்லங்கலட்டி இளாலை வைரவர் ஆலய அலங்கார உற்சவபூர்த்திவிழா எதிர்வரும் சனிக்கிழமை நடைபெற உள்ளது மறுநாள் பூங்காவன உற்சவம் இடம் பெற உள்ளது.

## மக்கள் கருத்து

### இ. போ. ச. கவனத்துக்கு

பருத்தித்துறை இ போ ச. வினால் சேவையில் ஈடுபடுத்தப்படும் பஸ் வண்டிகளில் உரிய வீதி இலக்கங்கள் பொருத்தப்படுவதில்லை இதனால் பஸ் பிரயாணிகள் பெரிதும் சங்கடப்பட வேண்டியேற்படுகின்றது. யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைக்கு செல்ல இருவழிகள் உண்டு. 750, 751 என்பனவாகும 750 வீதி இலக்க பஸ் வண்டி 751 வீதி இலக்க சேவையில ஈடுபடுவதனால் 750-ல் போக வேண்டிய வல்வெட்டித்துறை போன்ற பகுதிகளுக்கு செல்லும் பிரயாணிகள் அப்பஸ் வண்டியைத் தவறவிட நேருகின்றது. இதேபோல் 751 வீதி இலபஸ் 750 வீதி இலக்க சேவையில் ஈடுபடுவதனால் நெல்லியடி காரணவாய் பகுதிகளுக்கு செல்ல வேண்டிய பிரயாணிகள் அப் பஸ்வண்டிகளை தவறவிடுகின்றார்கள்.

இப்படியாக வீதி இலக்கங்கள் மாற்றிப் பொருத்தப் படுவதனால் பிரயாணிகள் தாம் செல்ல வேண்டிய இடங்களுக்கு நேரகாலத்துடன் செல்லமுடிவதில்லை வீணாக பஸ்பண்டிக்காக காத்திருக்க வேண்டிய நேரத்தையும் அதிகரிக்கவேண்டியுள்ளது. ஆகவே இப்பிரயாணிகளுக்குள்ள விண்கிரமத்தை இ. போ. ச. நிர்வாகம் கவனத்திற்கு எடுத்துக் கொண்டு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

ஆ. சிவஞானம்.
நெல்லியடி.





பெரு லாபம் பெற
கிரமக்சோன்
நெல் வயலில்
முறையைப் பாவியுங்கள்

கிரமக்சோன் முறை இதோ!

- பயிரிடும் முன் வயலில் நீர் வடிய விட்டுக் களைகளை வளரச் செய்யுங்கள்.
- சிவப்பு 'பொலிஜெட்' குழாய் முனை கொண்ட தெளி கருவி மூலம் 1 கலன் நீரில் 1 அவுன்ஸ் கிரமக்சோன் கலந்து தெளியுங்கள்.
- 1 ஏக்கருக்குத் தெளிக்கையில் 4 அவுன்ஸ் தெளி கலவையை மீதம் வையுங்கள்.
- மறுநாள், தவற விட்ட இடங்களில் இதைத் தெளியுங்கள்.
- 3 முழு நாட்கள் கழிந்ததும் களைகள் முற்றுக கும்படி வயலில் நீர் பாய்ச்சுங்கள்.
- 5 நாட்களின் பின் மீண்டும் நீர் வடிய விட்டு உழுங்கள்.
- பரம்படித்து, உலர் பசளை தெளித்த பின் விதையுங்கள்; அல்லது நாற்று நடுங்கள். % விளைச்சல் ஏக்கருக்கு 12 புசல் விதம் அதிகரிக்கும்.

கிரமக்சோன் முறை தரும் பயன்கள் இதோ!

- ஓர் உழவுச் செலவு மிச்சப்படும்.
- மண் உழுவதற்கு இலேசாக மெதுமைப்படும்.
- பத்து நாளில் பயிரிடும் வேலைகளை முடித்து விடலாம்.
- மற்றக் களைகளுடன் சல்வீனியாவும் கட்டுப்படும்.
- மண் செழுமையும் பசுமையும் அடைவதால் பயிர்கள் மேலும் செழித்து வளரும்.
- அழுகி உட்கும் களைகளும் பயிர்களுக்கு உரப் பசளையாகி விடும்.
- நெல்லோடு புதிதாக வளரும் களைகளும் பெருமளவு கட்டுப்படும்.
- நீர் மிச்சப்படும்; நீர்ப் பாசன நேரமும் குறையும்.

CIC

கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் லிமிட்டெட் (கொழும்பு)
ஹேமாஸ் கட்டிடம், பிறிஸ்டல் வீதி, த. பெ. எண் 352, கொழும்பு 1. தொலைபேசி: 28421 – 6

# "ஐரோப்பாவில் சமாதானத்தைப் பலப்படுத்த வேண்டும்!"

## வார்ஸா அமைச்சர்கள் கூட்டத்தில் அறைகூவல்

புடாபெஸ்ட், மே 24
'நாடுகளுக்கிடையே பரஸ்பர நம்பிக்கை ஆழமாக்கப்படல் வேண்டும்; பரவலான ஒத்துழைப்பு வளர்க்கப்பட வேண்டும்' என்று இங்கு நடந்தேறிய வார்ஸா உடன்படிக்கை நாடுகளின் அயல்நாட்டு அமைச்சர்கள் கூட்டத்தில் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'ஐரோப்பாவில் சமாதானத்தைப் பாதுகாத்து பலப்படுத்த வேண்டும். அதுவே மனித ஜாதியை எதிர்நோக்கும் பிரதான பிரச்னை. இதற்காக எதார்த்தபூர்வமான வேலைத் திட்டங்கள் வகுக்கப்படல் வேண்டும்' என்று கூறும் அறிக்கை,

'கெடுபிடியுத்தத்தின் உச்சக் கட்டத்தில் ஸ்தாபிக்கப்பட்ட இந்த ராணுவ அமைப்பு, சோஷலிஸ நாடுகளின் பாதுகாப்புச்சக்தியைப் பலப்படுத்துவதில் அக்கறை எடுத்த அதே சமயத்தில், சமாதானத்தை பலப்படுத்துவதற்கும் சர்வதேச அரங்கில் பதற்ற நிலைமையைத் தணிப்பதற்கும் திட்டங்களை வகுத்து வந்துள்ளது. 1968-ல் வார்ஸா நாடுகள் சிபார்சு செய்த அணு ஆயுதங்கள் பரவுவதைக் தடுக்கும் ஆலோசனை, பிற்காலத்தில் உடன்படிக்கையாக நிறைவேற்றப்பட்டது

ஹெல்சிங்கி மகாநாட்டில் பங்குபற்றிய ஐரோப்பிய நாடுகளும், கனடாவும், அமெரிக்காவும், எதிரி தாக்கும் முன்னர் தாக்குவது என்ற தோரணையில் அணு ஆயுதப் பிரயோகம் செய்வதைத் தடை செய்யும் உடன்படிக்கையொன்றை நிறைவேற்ற முன்வரவேண்டும் என்றும் அயல் நாட்டு அமைச்சர்கள் அறைகூவல் விடுத்துள்ளனர்' என்று அறிக்கை கூறுகிறது.

---

கிரிக்கெட்:

## அமெரிக்கா-இலங்கை மோதும்

லண்டன், மே 23
உலக கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டியில் கலந்து கொள்ள இங்கு வந்துள்ள இலங்கைக் கிரிக்கெட் கோஷ்டி இன்று அமெரிக்கக் கோஷ்டியுடன் மோதுகின்றது.

அடுத்த மாதம் நடைபெறவுள்ள உலக கிண்ணப் போட்டியில் பங்குபற்றும் கோஷ்டிகளுக்கான தெரிவுப் போட்டியில் இஸ்ரேல், நெதர்லாந்து ஆகிய கோஷ்டிகளுடனும் இலங்கைக் கோஷ்டி போட்டியிடும். இப்போட்டியில் வெற்றி பெறும் இரு நாடுகள் இறுதிப்போட்டிக்கு தெரிவு செய்யப்படும். (சூ)

---

கி. ச. தேர்தல்:

## ஆலோசனைக் கூட்டம்

[யாழ்ப்பாணம்]
சாவகச்சேரி தொகுதியிலுள்ள கிராமசபைத் தேர்தல் தொடர்பான தமிழ் காங்கிரஸின் ஆலோசனைக் கூட்டம் இம்மாதம் 26ம் தேதி பிற்பகல் சாவகச்சேரி சரஸ்வதி பூங்காவில் நடைபெறவிருக்கிறது.

சாவகச்சேரி தமிழ் காங்கிரஸ் இளைஞர் தலைவர் திரு ஆர் சுப்பிரமணியம் தலைமையில் இக்கூட்டம் நடைபெறவிருக்கிறது.

சாவகச்சேரி, கைதடி நாவற்குழி, வரணி, கச்சாய், மிருசுவில் கிராமசபைகளுக்கான தேர்தல் பற்றி இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்படும்

தமிழ்க்காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு குமார் பொன்னம்பலம், உபதலைவர் திரு எஸ் ஆர் கனகநாயகம் ஆகியோர் கலந்து கொள்வார்கள். [க]

---

## யாருடைய கைக்கடிகாரம்?

நல்லூரைச் சேர்ந்த சோமாஸ்கந்தர் நிருபன் என்பவரால் திருநெல்வேலி சிவன் கோவில் வீதியில் கண்டெடுக்கப்பட்ட பெண்கள் அணியும் கைக்கடிகாரம் ஒன்று 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

---

# பரு. இளைஞர் கொதிப்பு: புதிய தலைவர் தணித்தார்

(புலோலி)
பருத்தித்துறை எம். பி. யையும் தமிழர் விடுதலைக் கூட்டணி பருத்தித்துறைக்கிளையையும் கண்டிக்கும்வகையில்பருத்தித்துறை கொட்டடி பிள்ளையார் கோவில் முன்றலில் இளைஞர்கள் மேற்கொண்ட உண்ணாவிரத நடவடிக்கை புதிய நகரசபைத் தலைவர் திரு. வேலும்மயிலுவின் தலையீட்டினால் வாபஸ்பெறப்பட்டது.

தமிழ்ஈழக் கொள்கையை வலுப்படுத்தக்கூடிய வகையில் இயக்கத்தையும் தொண்டர்களையும் வலுப்படுத்தாமையை நீக்கி இயக்கத்தை சீர்திருத்தி பருத்தித்துறையில் சரியான முறையில் வழிநடத்தும் முகமாகவே இவ்வுண்ணாவிரத நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

உண்ணாவிரதம் நடைபெற்ற இடத்துக்கு பருத்தித்துறை புதிய நகரசபைத் தலைவர் உடனே சென்று அங்கிருந்த இளைஞர்களையும் அழைத்துக் கொண்டு கூட்டணியின் பருத்தித்துறைக் காரியாலயத்திற்கு சென்று அங்கு கலந்துரையாடினார். அப்போது இளைஞர்கள பருத்தித்துறை எம் பி. தொகுதியிலேயே வசிக்கவேண்டும் என்றும் இங்கு எம் பியின் அலுவலகத்தைத் திறந்து அங்கு அவரின் காரியதரிசி எந்நேரமுமிருந்து கடமையாற்ற வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டபோது நகரசபைத் தலைவர் எம் பியை அழைத்து அடுத்தமாதம் 18ம் திகதி ஆராய்வதென்றும் கூறியதைத்தொடர்ந்து இளைஞர்கள் அதனை ஏற்றுக்கொண்டனர்.

---

மாவிட்டபுரம் கொலை:

# சந்தேகநபர்கள் ஜூன்5வரை தொடர்ந்து றிமாண்ட்

[மாவிட்டபுரம்]
மாவிட்டபுரம் கொலை சம்பந்தமான சந்தேகநபர்களை பிணையில் விடுவதா இல்லையா என்பது குறித்து உயர் நீதிமன்ற தீர்ப்புக் கிடைக்கும் வரை அவர்களை றிமாண்டில் வைக்கும்படி மல்லாகம் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதம் முதலாம் திகதி மாவிட்டபுரத்தைச் சேர்ந்த 5 பிள்ளைகளுக்குத் தந்தையான கனகர் வைரவப்பிள்ளை என்பவர் கத்தியால்குத்தப்பட்டுக் கோரமாகக் கொலைசெய்யப்பட்டிருந்தார். இக் கொலை சம்பந்தமாக சரண் புகுந்த மாவிட்டபுரத்தைச் சேர்ந்த இளைப்பாறிய பொலிசாரான த. விஜயசிங்கம், அவரது புத்திரர்கள் விஜயகுலசிங்கம், சிவபாஸ்கரன் ஆகியோர் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் மீண்டும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது சந்தேகநபர்களைப் பிணையில் விடுமாறு கோரி யாழ் உயர்நீதிமன்றத்தில் சட்டத்தரணிகள் ஆர். ஜே. செல்வரத்தினம், மோதிலால்நேரு ஆகியோர் மனுவொன்றைத் தாக்கல்செய்துள்ளதாகவும் அம் மனுமீது ஜூன் 4ம் திகதி விசாரணை நடைபெற்று தீர்ப்பு வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து நீதிபதி திரு எஸ் ஆனந்தக் குமாரசாமி சந்தேகநபர்களை ஜூன் 5ம் திகதி வரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டு உயர்நீதிமன்றத் தீர்மைபடுத்த அவர்களைப் பிணையில் விடுவதா? இல்லையா? என்பது குறித்து அறிவிப்பதாகவும் தெரிவித்தார், சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணி ஆர் ஜே செல்வரத்தினம் ஆஜரானர்.

---

## கோயிலில் திருட்டு

[மாவிட்டபுரம்]
இரவு நேரத்தில் ஆலயத்தின் கதவை உடைத்து உட்புகுந்த திருடர்கள் அம்மன் சிலையை புரட்டியபின் தமது கைவரிசையைக் காட்டிச் சென்றுள்ளனர்

மாவிட்டபுரம் வீணியவரை அம்பாள் ஆலயத்தில் நடைபெற்ற இத்திருட்டுச் சம்பவம் குறித்து ஆலய ஆதீனகர்த்தா அ துரைசாமி ஐயர் காங்கேசன்துறைப் பொலிஸில் புகார் தெரிவித்துள்ளார்.

மேற்படி ஆலயக் கதவை உடைத்து உட்புகுந்த திருடர்கள் அம்பாள் சிலையைப் புரட்டி இயந்திரத்தகடு, தங்க ஆபரணங்கள் முதலிய 845 ரூபா பெறுமதியான பொருட்களை திருடிச் சென்றுவிட்டதாக அப்புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிசார் புலன் விசாரணை செய்து வருகின்றனர். [இ]

---

## சந்தேகநபருக்கு மனநோய்

(மாவிட்டபுரம்)
இருவரைக் கத்தியால் வெட்டிப் படுகாயப்படுத்திய நபருக்கு மனநோய் இருப்பதாக சந்தேகிக்கப்பட்டதையடுத்து, அவரை அங்கொடை மனநோய் ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காக அனுப்புமாறு மல்லாகம் நீதிபதி உத்தரவிட்டார்.

பலாலியைச் சேர்ந்த சி. பீலிக்ஸ், இ. ஜோசெப் ஆகியோரை கத்தியால் வெட்டி படுகாயம் ஏற்படுத்தியது தொடர்பாக காங்கேசன்துறைப் பொலிசார் பலாலியைச் சேர்ந்த சூ. ஜோசப் பீற்றர் என்பவரை கைதுசெய்து மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்செய்த போது சந்தேகநபருக்கு மனநோய் இருப்பதாக சந்தேகிக்கப்பட்டதையடுத்து ஜூன் 4ந் திகதிவரை றிமாண்டில் வைத்து அங்கொடை மனநோய் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்குமாறு மல்லாகம் நீதிபதி திரு. எஸ். ஆனந்தக்குமாரசாமி உத்தரவிட்டார்.

---


விவசாயிகளுக்கு ஓர் முக்கிய அறிவித்தல்

# "அம்புஷ் 25"

கிருமிநாசினி மூலம் வெங்காயத்தில் பச்சைப்புழுத் தாக்கத்தைக் கட்டுப்படுத்தல்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வெங்காயத்தில் பச்சைப்புழுத்தாக்கம் (SPODOPTERA) மிகவும் மோசமாக உள்ளது. அதற்குத் தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் உடனே எடுக்காவிடில் உங்களது முழுப்பயிரும் நாசமாகிவிடும்.

வெங்காயம் முளைத்த நாளில் இருந்து "அம்புஷ் 25" விசிறுங்கள். தொடர்ந்து 30 நாட்களுக்கு 5 நாட்கள் இடைவெளியில் விசிறுதல் வேண்டும். 30 நாட்களின் பின்னர் 14 நாட்கள் இடைவெளியில் விசிறல் வேண்டும்.

அம்புஷ் 25 பச்சை புழு முட்டைகளை அறவே அழிக்க வல்லது. ஆகவே நீங்கள் தாமதியாது அம்புஷ் 25தை விசிறுங்கள். ஒரு அவுன்ஸ் அம்புஷ் 25 மருந்தை 10 கலன் நீரில் கலந்து பாவிக்கவும். இக்கலவையுடன் ஏதாவது ஒரு ஒட்டும் தன்மையுடைய மருந்தினையும் கலந்து விசிறவும். ஒரு கலன் கலவையுடன் ஒரு அவுன்ஸ் ஒட்டும் மருந்தினைக் கலக்கவும்.

"அம்புஷ் 25" மருந்தினை மாத்திரமே பாவியுங்கள். வேறு எவ்வித கிருமிநாசினிகளுடனும் கலக்க வேண்டாம். அம்புஷ் 25தை அதிகாலையிலோ அல்லது மாலையிலோ விசிறவும்.

மேலதிக விபரங்கட்கு தொடர்பு கொள்ளுங்கள் :

CIC

கெமிக்கல் இன்டஸ்ரீஸ் (கொழும்பு) லிமிட்டெட்,
த. பெ. இலக்கம் 352,
கொழும்பு - 1.

**Rio** (Jaffna) Phone : 7607
Daily 10-30, 4-45, 7-00 & 9-30 p.m.
Jim Brown in
SLAUGHTERS BIG RIP OFF
(Adults only)

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 6-30 9-45
சனி, ஞாயிறு 2-30
சீதாராம கலியாணம்

**வெஸ்லி** (சாவகச்சேரி)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி
கப்பலோட்டிய தமிழன்

22-வது வாரம்
**வின்சர்** (யாழ்ப்பாணம்)
போன்: 466
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-00, 6-00, & 9-30
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

**ராஜா** (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். — ஜெயலலிதா, சௌகார்ஜானகி நடித்த
ஈஸ்மன் கலர்
ஒளிவிளக்கு
புதிய பிரதி

**REGAL** (Jaffna)
2nd CROWDED WEEK
Daily 4-30, 7-00 & 9-30 p.m. only
PERCY'S PROGRESS
(Color) (Adults Only)
வயது வந்தவர்களுக்கு மட்டும்

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30 2-30, 3-15, 9-30.
THE TOWERING INFERNO
த டவரிங் இன்பேர்னோ

**ராணி** (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஃ டொன் பொஸ்கோ ஃ காஞ்சனா
ஃ செல்வசேகரன் ஃ ஜவாகர்
இன்னும் பலர் திறம்பட நடித்த
எங்களில் ஒருவன்

3-வது வெற்றி வாரம்!
தினசரி 4 காட்சிகள்
**சாந்தி** (யாழ்நகர்)
இராஜேந்திர குமார் — ஹேமமாலினி — பானுரேகா
"கோரா அவுர் காலா" ஹிந்தி கலர்
யாழ்நகரில் இப்படம் இதுவே கடைசித்தடவை

தினசரி 4 காட்சிகள்
பல்லாயிரம் யாழ் ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்கத் திரையிடப் படுகின்றது.
**மனோகரா** (யாழ்நகர்)
ஸ்ரீகாந்த் – பிரமிளா
லக்ஷ்மி (பசு) நடித்த
கோமாதா என் குலமாதா
(புதிய பிரதி - ஈஸ்மன்கலர்)

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி: 3-30, 6-30 & 9-45
சனி, ஞாயிறு: 10-30, 3-30
6-30 & 9-45
எம். ஜி. ஆர் — சாவித்திரி
வேட்டைக்காரன் (புதிய பிரதி)

**லிடோ** (யாழ். நகர்)
போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
சிவாஜி—சரோஜாதேவி
என் தம்பி

# இன்றைய பலன்

வைகாசிமாதம் 11-ம் திகதி

வெள்ளிக்கிழமை

(25-5-1979)

**மேடம்:** எண்ணங்கள் ஆயிரம் சிந்தனையிலே வந்து உந்தும், ஏமாற்றம் தாக்கும், விந்தையான போக்கு வேடிக்கை காட்டும்.

**இடபம்:** ஒளிபரப்பும் வாழ்க்கை, உறவினர் மத்தியில் ஒற்றுமை மலரும், எதிர்பார்த்ததை விட விரும்பியவை அதிகம் கிடைக்கலாம், பொன்னான தினம்.

**மிதுனம்:** வாழ்க்கையில் கொந்தளிப்பான நிலை தென்படும், உடல் நலன் பாதிக்கப்படலாம், பெண்கள் மிகவும் அவதானமாக நடக்கவும்.

**கடகம்:** நினைவின் நிழலாட்டம் நிம்மதியைச் சிதறடிக்கும், உறவினர்கள் மத்தியில் பூசல்கள் தலைதூக்கும், அன்னியர்கள் தொடர்பால் சிக்கல்கள் தோன்றலாம்.

**சிங்கம்:** நல்லதைச் செய்வீர், நலன் பெருகும், பிரமுகர்கள் உங்களைத் தேடி வருவார்கள், சமூகத்தில் மதிப்பு உயரும்.

**கன்னி:** சமூகத்தில் அந்தஸ்து உயர்வதற்கு இடமுண்டு, பிள்ளைகளின் முன்னேற்றம் பெருமையைத் தேடித் தரும், மதத் தொடர்பான காரியங்களில் அதிகம் ஈடுபடுவீர்கள்.

**துலாம்:** ஏமாந்த நேரத்தில் உங்களை வீழ்த்தி விடுவதற்குச் சிலர் திட்டம் போடுவார்கள், எந்தச் சந்தர்ப்பத்திலும் விழிப்புணர்ச்சியுடன் இருப்பது விரும்பத்தக்கது.

**விருச்சிகம்:** இன்பத்தின் இணைப்பு இன்று தாராளமாகக் கிடைக்கும், காதலர்கள் வாழ்க்கையில் தடைகள் விலகலாம், குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**தனுசு:** பணத்தைக் கொடுத்து பகையைச் சம்பாதித்துக் கொள்ளுவீர்கள், தொழில் துறையிலும் சோர்வு தென்படும், நிதான புத்தியுடன் நடக்கவும்.

**மகரம்:** உழைப்பின் வெற்றிக்கு இன்று உறுதியளிக்கப்படுகிறது. அதிக பிரயாசையின்றி ஆதாயத்தைத் தேடுவீர்கள். பரோபகார சிந்தை மேலிடும்.

**கும்பம்:** புதிய கண்டுபிடிப்புகளில் மனம் நாடும், தொழில் புரியும் இடத்தில் உயர்ந்த அந்தஸ்து கிடைக்கும், விஞ்ஞானத் துறையில் ஈடுபடுபவர்கள் பாராட்டப்படுவர்.

**மீனம்:** வருமானத்தில் அபிவிருத்தி காணப்படும். பிறந்தகத்திலிருந்து அழைப்பிதழ் கிடைக்கலாம். முன்னேற்றமான தினம்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

ஏழாலை வடக்கு

## மின்னொளியில் இன்றைய கரபந்தாட்டம்

[தெல்லிப்பழை]

ஏழாலை வடக்கு கலாநிதி சனசமூகநிலையத்தின் கலாநிதி விளையாட்டுக்கழகத்தால் மின்னொளியில் நடாத்தும் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று மோதும் கழகங்கள்;

6 வீரர் போட்டியில் ஆவரங்கால் சர்வோதயா வி. க வுடன் சிறுப்பிட்டி மக்கள் வி. க மோதி வெற்றி பெறும் கழகத்துடன் ஏழாலை மேற்கு முத்தமிழ் மன்றம் போட்டியிடும். அத்துடன் திருநெல்வேலி சிவன் வி. க வும் மோதவுள்ளது.

4 வீரர் போட்டியில் மயிலிட்டி இளங்கோ வி. க வுடன் மக்கள் வி. க மோதி வெற்றிபெறும் கழகத்துடன் நீர்வேலி ஐக்கிய வி. க போட்டியிடும்.

'செற்அப்' ஆட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் வி. கவை எதிர்த்து ஆவரங்கால் சரஸ்வதி வி. க மோதி வெற்றிபெறும் கழகத்துடன் ஐக்கிய வி. க போட்டியிடும். [கா]

## வாலிபன் பலி

[யாழ்ப்பாணம்]

கார்-சைக்கிள் மோதலில் வாலிபர் ஒருவர் பலியான பரிதாபகரமான சம்பவம் ஒன்றுபண்டத்தரிப்பு சந்தியில் நிகழ்ந்துள்ளது.

உடுவிலில் சம்பவம்:

# அதிகாலையில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூடு இளைஞர் பலியானார்

[யாழ்ப்பாணம்]

நித்திரையில் ஆழ்ந்திருந்த ஒருவர் இனந்தெரியாத நபர்களால் அழைக்கப்பட்டு வீட்டு வாசலில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவமொன்று உடுவில் பகுதியில் நிகழ்ந்துள்ளது.

உடுவில் தெற்கைச் சேர்ந்த ராசரத்தினம் ராஜேஸ்வரன் [வயது 23] என்ற மெக்கானிக்கே இவ்வாறு கொல்லப்பட்டவராவார்.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது: புதன்கிழமை அதிகாலை 2-00 மணியளவில் காலஞ்சென்றவரான ராஜேஸ்வரன் ஆழ்ந்த நித்திரையிலிருந்தசமயம், யாரோ இனந்தெரியாத சிலர் வீட்டின் வெளியில் நின்று 'ராஜேஸ்வரன்' எனப்பெயர் சொல்லி அழைத்ததாகவும், சத்தத்தைக் கேட்டு இவர் வெளியே வந்தபோது துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டதாகவும் அதைத் தொடர்ந்து சூட்டிற்கு இலக்கான அவர் யாழ். அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதும் அவர் இறந்துவிட்டதாகவும் விசாரணைகளின் போது தெரிவிக்கப்பட்டது [கா]

## ஆலயத்தில் திருடச்சென்று அம்பலத்துக்கு வந்தவர்!

[மாவிட்டபுரம்]

ஆலயத்தில் கைவரிசை காட்டியவர், பொலிசாரிடம் அகப்பட்டபோது, அவர் நடத்திய மற்றும் சில கைவரிசைகளும் அம்பலத்திற்கு வந்தன. குற்றத்தை ஒப்புக்கொண்ட அவருக்கு தண்டனை வழங்குவதை மல்லாகம் நீதிபதி ஒத்திவைத்தார்.

தையிட்டி பிள்ளையார் கோவிலிலிருந்து 1500 ரூபா பெறுமதியான வெள்ளி அங்கி திருட்டுப் போனது குறித்து காங்கேசன்துறைப் பொலிசில் செய்யப்பட்ட புகாரின் பேரில் பொலிசார் விசாரணையிலீடுபட்டபோது, லுணுகலை என்னுமிடத்தைச் சேர்ந்த தங்கவேலு ராஜகுமார் என்பவர் அதுகுறித்துச் சந்தேக நபராகக் கைது செய்யப்பட்டார்.

அவரை விசாரணை செய்தபோது தையிட்டியைச் சேர்ந்த இளையதம்பி என்பவரது வீட்டில் 2000 ரூபா பெறுமதியான புடவை, பாத்திரங்களை திருடியது, எஸ். ஐயாத்துரை என்பவரது வீட்டில் 681 ரூபா பெறுமதியான வானொலிப் பெட்டி, குடை என்பவற்றை திருடியது ஆகிய சம்பவங்கள் அம்பலத்திற்கு வந்தன. இவரை மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது, அவர் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் தண்டனை வழங்குவதை ஜூன் 4ம் திகதிக்கு நீதிபதி திரு. எஸ். ஆனந்தக்குமாரசாமி ஒத்திவைத்தார். [இ]

## சிறுகைத் தொழிலாளருக்கு ஊக்குவிப்பு நடவடிக்கை

[உடுப்பிட்டி]

யாழ். மாவட்டத்தில், கிராமங்களில் சிறிய அளவில் குடிசைக் கைத்தொழிலாக இயங்கி வரும் சிறுகைத்தொழில் நிலையங்களின் விபரங்கள் திரட்டப்பட்டுவருகின்றன.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னாண்டோவின் பணிப்பைத் தொடர்ந்து உதவி அரசாங்க அதிபர்களினால் கிராம சேவை அலுவலர் பிரிவுகளில் இருந்து இவ்விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் கிராமங்களில் பரம்பரையாக இரும்புப்பட்டறைகள், தச்சுத்தொழில், மட்பாண்டத் தொழில்களைச் செய்துவரும் வசதியற்ற சிறுகைத்தொழிலாளர்களுக்கு ஊக்கம் அளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "குறைபாடுகளை உடனுக்குடன் தீர்க்க வேண்டும்"

(உடுப்பிட்டி)

"பாடசாலைகளின் குறைபாடுகள் உடனுக்குடன் போக்கப்படவேண்டும். இதற்காகவே அரசாங்கம் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களை நிறுவியுள்ளது"

இவ்வாறு கரவெட்டி திரு. இருதயக் கல்லூரியில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப்பேசுகையில் கல்லூரி அதிபர் திரு. தோமஸ் ஈப்பன் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"முன்னர் பெற்றோரும், ஆசிரியர்களும் மட்டுமே பாடசாலைகளின் முன்னேற்றத்தில் பங்குகொள்ளமுடிந்தது. இதனால் பாடசாலை முன்னேற்றத்தில் ஆர்வமும், அக்கறையும் கொண்ட பலர் பாடசாலை வளர்ச்சிக்காக உழைக்கமுடியாமற்போய்விட்டது.

இதனாலேயே அரசாங்கம் சகலரும் பாடசாலை முன்னேற்றத்தில் பங்குகொள்ளக்கூடியதாகப் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களை அமைத்துள்ளது. இவ் அபிவிருத்திச் சங்கங்களைச் சரியானமுறையில் பயன்படுத்தினால் பெரும்நன்மை அடையலாம்" என்றார்.

செயலாளர் திரு. நீ. அந்தோனிமுத்து நன்றி கூறினார்.

## பாடசாலைப் போட்டிகள்

(உடுப்பிட்டி)

உடுப்பிட்டிக் கல்வி வட்டாரப்பாடசாலைகளுக்கிடையிலான சங்கீத, நடன, நாடகப் போட்டி அடுத்த மாதம் முதலாம் திகதி உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## வீதி திருத்த நிதி ஒதுக்கீடு

[கோப்பாய்]

கோப்பாய் வீரபத்திரர் கோவில் வீதியை திருத்தி அமைப்பதற்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட நிதியிலிருந்து 10 ஆயிரம் ரூபாவை கோப்பாய் எம். பி. திரு எஸ். கதிரவேலுப்பிள்ளை ஒதுக்கியுள்ளார்: [கு]

# மானிப்பாய் செல்வம் உலகசாதனை நிலைநாட்டினர்

## 160 மணி நேரம் டுவிஸ்ட் ஆடினர்

[யாழ்ப்பாணம்]

டுவிஸ்ட் நடனத்தில் மானிப்பாயைச் சேர்ந்த க. செல்வம் எனும் இளைஞர் புதிய உலகசாதனையை நிலை நாட்டியுள்ளார்.

மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை காலை 5-30 மணிக்கு தமது டுவிஸ்ட் சாதனை முயற்சியை மேற்கொண்ட இளைஞர் செல்வம், நேற்று நண்பகல் 12-30 மணியுடன் நூற்றுஐம்பது மணி நேரத்தை முடித்து, புதியசாதனையை ஏற்படுத்தி தொடர்ந்தும் டுவிஸ்ட் ஆடிக்கொண்டிருந்தார்.

விளையாட்டு அமைச்சின் அனுமதியுடன், மானிப்பாய் வை. எம். சி. ஏ. ஆதரவுடன் மானிப்பாயில் ஆரம்பமான க. செல்வத்தின் டுவிஸ்ட் சாதனை முயற்சியை மானிப்பாய் எம் பி திரு. வி. தர்மலிங்கம் ஆரம்பித்து வைத்தார். தொழிலதிபர் க. கனகராசா, வைத்திய கலாநிதி டாக்டர் பிலிப், வைத்திய கலாநிதி அ. செல்லாதரன், மானிப்பாய் முன்னாள் பட்டினசபைத் தலைவர் சி. இராசேந்திரம், முன்னாள் பட்டின சபை உபதலைவர் சி. மார்க்கண்டு ஜே. பி., உட்பட பல பிரமுகர்களும் ஆரம்பநிகழ்ச்சியில் கலந்துகொண்டனர். பிரதம நடுவர்களாக லயன்ஸ் கழகம். ரோட்டரி கழகம் மற்றும் முக்கிய கழகங்களின் பிரதிநிதிகள், மற்றும் பிரமுகர்கள பங்குபற்றினர்.



யாழ்ப்பாணம் முஸ்லிம்பகுதியைச் சேர்ந்த ஜனாப் பரீத் தஸீர் 137 மணி நேரம்வரை டுவிஸ்ட் நடனமாடி புதிய சாதனை ஏற்படுத்தியிருந்தார் இச்சாதனையை கொடிகாமத்தைச் சேர்ந்த எஸ். இராமச்சந்திரன் கடந்த மாதம் 28ம் திகதி நள்ளிரவு 139 மணி நேரம்வரை டுவிஸ்ட் நடனமாடி முறியடித்திருந்தார். பின்னர் இச்சாதனையை மானிப்பாய் இளைஞர் செல்வம் இப்பொழுது வெற்றிகரமாக முறியடித்து புதிய உலகசாதனையை ஏற்படுத்தியுள்ளார்.

செல்வம் தமது சாதனை முயற்சியில், மூன்றுவது, நான்காவது நாட்களில் சற்றுத் தளர்வுற்றுக் காணப்பட்டபோதிலும், நேற்று முன்தினமும் நேற்றும் மிக உற்சாகமாகக் காணப்பட்டார். டுவிஸ்ட் நடனத்தை ஏராளமானவர்கள் கண்டுகளித்ததுடன் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

நேற்றிரவு இவர் தமது டுவிஸ்ட் நடனத்தை டாக்டர் பிலிப்பின் ஆலோசனையின்மீது நிறுத்திக்கொண்டபோது மொத்தம் 160 மணிநேரம் வரை டுவிஸ்ட் ஆடி சாதனை நிலைநாட்டியிருந்தார்.

# சாவகச்சேரிக் கொலைவழக்கு இன்று தீர்ப்பு வழங்கப்படும்

[யாழ்ப்பாணம்]

சாவகச்சேரியில் மகனைக் கொலைசெய்து மனைவியைக் கொலைசெய்ய முயன்றதாகக் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பு இன்று வழங்கப்படவிருக்கிறது.

இவ்வழக்கு யாழ் மேல்நீதி மன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். ஜாமில் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 77 அக்டோபர் 28ம் தேதி சாவகச்சேரியில் நாகலிங்கம் சண்முகநாதன் என்பவர் அவரதுமகன் சண்முகதாசனைக் கொலைசெய்ததாகவும், மனைவி பராசக்தியைக் கொலைசெய்ய முயற்சித்ததாகவும் குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் சட்டத்தரணி சி. நாகராசா சட்டத்தரணி செல்வி வின்சென்ட் சட்டத்தரணி செல்வி ஆர் இராசரத்தினம் ஆகியோர் ஆஜரானார்கள். அரசாங்க தரப்பில் சட்டத்தரணி தவராஜா ஆஜரானார்.

நேற்று சட்டத் தரணிகள் தொகுப்புரை நிகழ்த்தினார்கள். இன்று தீர்ப்பு வழங்கப்படும். [ச]

## பேராசிரியர் மரணம்:

# வண்டிலை விலத்துகையில் ஏற்பட்ட விபத்து

[யாழ்ப்பாணம்]

கம்பி ஏற்றிக்கொண்டு எதிரே வந்த மாட்டு வண்டி ஒன்றை காரில் வந்த பேராசிரியர் செல்வநாயகம் விலத்த முயன்றசமயம் வண்டிலிலிருந்த இரும்புக்கம்பி ஒன்று தற்செயலாக அவரது கழுத்தில் குத்தி பின்பக்கம் வந்துவிட்டதாம். இதன் காரணமாகவே அவர் காலமானார்.

நல்லூர் குறுக்குத் தெருவைச் சேர்ந்த பேராசிரியர் செல்வநாயகத்தின் மரண விசாரணையில் மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

யாழ். மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் மரணவிசாரணை நடத்தினார்.

வீதியால் சென்ற இருவர் உடனடியாகச் சென்று அவருக்கு முதலுதவி அளித்து வேறு ஒரு வாகனத்தில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதித்தபோது அங்கு அவர் மரணமானார்.

பேராசிரியர் செல்வநாயகம் நல்லூர் குறுக்குத் தெருவிலுள்ள வீட்டிற்கு செல்வதற்கு திரும்பியபோது எதிரே வந்த மாட்டுவண்டியிலிருந்த கம்பிக்கட்டு அவிழ்ந்து, அதில் ஒன்று காரின் பக்கத்து கண்ணாடியூடாக உள்ளே சென்று அவரின் கழுத்தைத்துளைத்ததாக விசாரணையில் தெரியவந்தது.

விசாரணையின் பின் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ் கனகரத்தினம் விபத்து மரணமெனத் தீர்ப்பளித்தார்.

ஆரியகுளத்தைச் சேர்ந்த வண்டில் செலுத்திவந்தவரான செல்லையா சுப்பிரமணியத்தை றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட பேராசிரியர் செல்வநாயகம் நான்கு பிள்ளைகளின் தந்தையாவார். இவர் யாழ்பல்கலைக் கழகத்தில் புவியியற்றுறைப் பேராசிரியாகவும், செனற்சபை உறுப்பினராகவும், கழகப்பேரவைப் பிரதிநிதியாகவும், புவியியற்றுறைத் தலைவராகவும் பதவிவகித்து வந்தார்.

இவர் புவியியல், இந்து சமயம் தமிழ் மொழி, கலாச்சாரம், தமிழ்ப்பிரதேச பொருளாதார வளம் போன்ற துறைகளிலும் தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டு வந்தார்.

அண்மையில் சாவகச்சேரி மூலவள ஆராய்ச்சியிலும் இவர் ஈடுபட்டு தமிழ்ப்பகுதியின் பொருளாதார வளர்ச்சிக்காகப் பாடுபட்டார்.

இவர் தான் பிறந்த நாட்டிற்கும் தனது மொழிக்கும் இனத்திற்கும் சேவை செய்வதற்காக நைஜீரியாவில் தான் வகித்த உயர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு ஈழநாட்டிற்குத் திரும்பிவந்து பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகச் சேர்ந்த பணியாற்றினார்.

யாழ்பபாணத்தில் பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்பட்ட போது தமிழ் மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டுமென்ற பேராவலால் யாழ். பல்கலைக்கழகத்திற்கு மாற்றம் பெற்று வந்து இங்கு பணியாற்றினார். [கொ]

## இலக்கிய சந்திப்பு

[யாழ்பபாணம்]

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள இந்திய எழுத்தாளரும் "தடுமாற்றங்கள் பதினைஞ்சு" சிறுகதைத் தொகுதி ஆசிரியரும், கணையாழி தீபம், குமுதம் போன்ற பத்திரிகைகளில் தொடர்ந்து எழுதி வரும் திரு. ஏ.ஏ.கே. கோரியுடன் இலக்கியச் சந்திப்பு ஒன்றை 'மல்லிகைப் பந்தல்' ஏற்பாடு செய்துள்ளது.

இச்சந்திப்பு இன்று மாலை 4-30 மணிக்கு யாழ். புகையிரத ஒழுங்கையிலுள்ள மாஸ்டர் சிவலிங்கத்தின் இல்லத்தில் நடைபெறும்.

## மரண அறிவித்தல்

### பேராசிரியர் சோ. செல்வநாயகம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியற்றுறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி சோ. செல்வநாயகம் அவர்கள் அகால மரணமானார். இவர் ஆசிரியை தயாநிதியின் அன்புக் கணவரும், செல்வன்கள் நிரஞ்சன், நிர்மலன், நிருத்தனன், செல்வி நிருத்திகா ஆகியோரின் அருமைத்தந்தையும், திருமதி பொன்னம்மா பொன்னம்பலம், தலைமையாசிரியர் பொன்னம்பலம், திருமதி செல்லாச்சி தம்பிப்பிள்ளை, காலஞ்சென்ற வர்த்தகர் திரு. கந்தசாமி, திருமதி மனோன்மணி கனகசபை, திருமதி புவனேஸ்வரி சிவசம்பு, ஆசிரியை திருமதி நல்லதங்கம் இரத்தினகோபால், திரு. குமாரசுவாமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சின்னத்தம்பி பொன்னையாவினதும், திருமதி மீனாட்சிப்பிள்ளையினதும் அன்பு மருமகரும், கண்காணிப்புப் பொறியியலாளர் திரு தயாபரன் [நெதர்லாந்து]. திரு தயாநேசன் [சிவம்ஸ் எக்ஸ்போர்ட் லிமிட், கொழும்பு] திருமதி தயாரதி சிவரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், திரு. பொ. சிவரத்தினம் [நிர்வாக இயக்குநர், சிவம்ஸ் எக்ஸ்போர்ட் லிமிட், கொழும்பு, உரிமையாளர்: கமலா பீடிக்கம்பனி, எஸ். வி. பி. சிவம், யாழ்ப்பாணம்] அவர்களின் அன்புச் சகலனும், திருமதி திருநயவதி தயாபரன், திருமதி நவமணி தயாநேசன் [தாதி, சாவகச்சேரி ஆஸ்பத்திரி] ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரரும், தர்மபாலன் [சிவம்ஸ் யாழ்ப்பாணம்] தர்மலீலா [பலாலி ஆசிரியர்கழகம்] சத்தியபாலன் [U K], இரத்தினபாலன் [U K], புவனபாலன் [மேர்க்கன்டைல் கிறடிற் லிமிட், கொழும்பு] சோதிபாலன் [மேல்ஷிப்] ஆகியோரின் அன்புச் சிறிய தந்தையும் ஆவர். அன்னாரின் பூதவுடல் 26-5-79 சனிக்கிழமை காலை 8 மணிக்கு பலாலிவீதி 104 ம் இலக்க இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். 2559

## மாஸச்சுசெட்ஸ்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ரூக இத்தோட்டத்தொழிலாளர்களை இவர்கள் பிறந்த நாட்டிலிருந்தே கட்டாயமாக நாடு கடத்தப்பட வேண்டுமென்று 1964ம் ஆண்டு அரசாங்கம் மனிதாபிமானமற்ற முறையிலும் உணர்ச்சிப் பற்றவகையிலும் தீர்மானித்து விட்டபடியினாலும்

1975ம் ஆண்டு அப்பல் நாட்டுத் தோட்டங்கள் தேசிய மயமாக்கப்பட்டு அங்கிருந்து வெளியேறிய தமிழ்த் தொழிலாளர்கள் பிச்சைக்காரர்களாக நிர்ப்பந்திக்கப்பட்டமையாலும் தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள கல்வி நிறுவனங்கள் கத்தோலிக்க திருச்சபைக்கும், புரட்டஸ்ட் பிரிவினருக்கும் சொந்தமாக இருந்ததினால் 1960-61 ம் ஆண்டுகளில் அரசாங்கம் இப்பாடசாலைகளைத் தேசியமயமாக்கி அதன்மூலம் தமது பாரபட்சக் கொள்கைகளை தமிழர்களுக்கும், பௌத்தர் சாராத கல்விக்கும், எதிராக நடைமுறைப்படுத்திவருவதாலும், சிங்களப் பெரும்பான்மைப் பிரதேசங்களில் உள்ள பல தமிழ் மொழிப் பாடசாலைகளை மூடி அவற்றை மீண்டும், சிங்களப் பாடசாலைகளாகத் திறந்தும், இதன் மூலம் தமிழர்களைச் சிங்கள மொழிமூலம், கல்வி பயில நிர்ப்பந்திப்பதனாலும்—

சிங்கள மாணவருக்குச் சலுகை வழங்கவும், தமிழ் மாணவர்களை ஒதுக்கிவைக்கவும் ஏற்பாடு செய்யும் பாரபட்சம் நிறைந்த தரப்படுத்தல் முறையொன்றை அரசாங்கம் 1971ம் ஆண்டு புகுத்தியும், பல்கலைக்கழக பிரவேசத்தில் தகமைக்கு இடம் மறுப்பதையே வேண்டுமென்று நோக்கமாகக் கொண்டு' நடத்திவருவதாலும்—

சிங்கள மொழிக்கும், பௌத்த மதத்திற்கும் முதன்மை வழங்குவதான புதிய அரசியலமைப்புத் திட்டமொன்று பாராளுமன்றத்திலுள்ள பெரும்பான்மை தமிழ் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடாமலும், அவர்களின் சம்மதமில்லாமலும், ஒருதலைப்பட்சமாக நிறைவேற்றப்பட்டிருப்பதாலும்—

1972ம் ஆண்டு அரசியல் அமைப்புத் திட்டத்திற்குப் பதிலாக 1978ல் கொண்டு வரப்பட்ட அரசியலமைப்புத் திட்டத்திற்கு தமிழ் மக்கள் மீண்டும் பங்காளிகள் இல்லாதிருப்பதினாலும்,

மனிதாபிமானமற்ற முறையில் இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்படும் அநீதிக்கு எதிராக கண்டனம் தெரிவிக்கும்படியும் அவ்வநீதியை அகற்றுவதில் தமது பதவி வழியாக கிடைக்கும் குறிப்பிடத்தக்க பாரிய செல்வாக்கைப் பிரயோகிக்கும்படியும், மாஸெச்சுசெட்ஸ்சபை பிரதிநிதிகள்சபை அமெரிக்க ஜனாதிபதியையும், அமெரிக்க காங்கிரஸையும் (பாராளுமன்றத்தை) இத்தால் வற்புறுத்துகின்றதென்பதுடன்.

இத்தீர்மானங்களின் பிரதிகளை அமெரிக்க ஜனாதிபதிக்கும், காங்கிரசின் இரு சபையினதும் தலைமை தாங்கும் அலுவலர்களுக்கும், பொதுநலவமைப்பின் உறுப்பினர்களுக்கும் (அமெரிக்க இராஜாங்க அமைச்சருக்கும், உலக வங்கிப் பணிப்பாளருக்கும், ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் செயலாளர் நாயகத்திற்கும் அனுப்பிவைக்கவேண்டுமென்றும் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது. (ம)

## துன்பங்களைத்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

போது மக்கள் நேரடியாக அதில் பங்குகொள்ள வேண்டும்.

கடந்த காலங்களில் தமிழ் மக்கள் அனுபவித்த துன்பங்களைவிடக் கூடுதலான துன்பங்களை அனுபவிக்கவேண்டி நேரிடும். துன்பங்களைத் தாங்கிக் கொள்ளும் மனோ நிலைக்கு எமது மக்கள் தயாராகவேண்டும்.

நாம் ஆரம்பிக்க இருக்கும் அறப்போராட்டத்தில் வரிகொடா இயக்கமும் ஒன்றாகும். நாம் ஆரம்பிக்க இருக்கும் ஒத்துழையாமை இயக்கத்தில் மக்கள் நேரடியாகப் பங்குபற்றவேண்டும். மக்கள் நேரடியாகப் பங்குபற்றுவதன் மூலம்தான் அரசாங்கத்தை எம்மிடம் மண்டியிடச் செய்ய முடியும்.

இளைஞர்கள் தலைவர்கள்மீது நம்பிக்கை வைக்கவேண்டும். தலைவர்கள்மீது நம்பிக்கை வைக்காத எந்த இயக்கமும் இதுவரை எந்தப் போராட்டத்திலும் வெற்றியடைந்ததாகச் சரித்திரம் இல்லை என்றார்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 65ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு மே மாதம் 25-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB/8945/78 The Eelanaadu P B No: 49, Telegram: Eelanaadu! Telephone 889.